$(B \longrightarrow C), \uparrow H_2 = u\sin\theta\, t - \frac{1}{2}gt^2$ 5

$\Longrightarrow H_1 + H_2 = u\sin\theta\, t$ 5

$\Longrightarrow \sqrt{3}h = u\sin 60\ t$ 5

$t = \frac{2h}{u}$

25

3. இலேசான நீட்டமுடியாத இழையின் ஒரு முனையில் m திணிவுடைய துணிக்கை P இணைக்கப்பட்டு, இழையானது கிடை சீலிங்கில் நிலைப்படுத்தப்பட்ட ஒப்பமான கப்பியின் மேலாகச் சென்று பின் m திணிவுடைய ஒப்பமான அசையும் கப்பிக்கு கீழாகச் சென்று மறுமுனை சீலிங்கில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. கப்பிகளுடன் தொடுகையுறாத இழையின் பகுதிகள் நிலைக்குத்தாக இருக்கும் அதே வேளை, இழை இறுக்கமாக இருக்க ஆரம்பத்தில் துணிக்கை P ஆனது நிலையான கப்பியில் இருந்து $0.2m$ கீழே இருக்க பிடிக்கப்பட்டு ஓய்வில் இருந்து விடப்படுகிறது. $g = 10\ ms^{-2}$ எனக்கொண்டு, P இன் ஆர்முடுகல் $5\ ms^{-2}$ ஆக மேல்நோக்கி இருக்கும் எனக்காட்டி, P ஆனது நிலைத்த கப்பியை அடைய எடுத்த நேரத்தைக் காண்க.



$x + 2y =$ மாறிலி

$\ddot{x} + 2\ddot{y} = 0$ ....(1) 5



$F = ma$

$P, \downarrow \quad mg - T = m\ddot{x}$ ....(2) 5

$Q, \downarrow \quad 4mg - 2T = 4m\ddot{y}$

$2mg - T = 2m\ddot{y}$ ....(3) 5

$(3) - (2) \implies mg = m(2\ddot{y} - \ddot{x})$

$\implies 10 = 2 \times \left(-\frac{\ddot{x}}{2}\right) - \ddot{x}$

$\implies \ddot{x} = -5$

$\therefore$ P இன் ஆர்முடுகல் $5\ ms^{-2} \uparrow$ 5

P இற்கு $\uparrow s = ut + \frac{1}{2}gt^2$

$\implies 0.2 = 0 + \frac{1}{2} \times 5 \times t^2$

$\implies t^2 = 0.08 = \frac{2}{25}$

$\implies t = \frac{\sqrt{2}}{5} s$ 5

25

4. $1000kg$ திணிவுள்ள காரானது கிடையுடன் $\sin^{-1}\left(\frac{1}{20}\right)$ சாய்வுள்ள பாதையில் மேல்நோக்கி $16\ ms^{-1}$ எனும் மாறாக்கதியுடன் இயங்குகிறது. காரின் இயக்கத்திற்கான தடை விசை $kv\ N$ ஆகும். இங்கு k மாறிலியும் v ஆனது ms^{-1} இல் கதியுமாகும். கார் $8.16\ kW$ வலுவுடன் இயங்குகிறது எனக் கொண்டு $k = \frac{5}{8}$ எனக்காட்டுக. காரானது அதே தடை வடிவத்தை ஒத்த தடையுடன் கிடை பாதையில் அதே வலுவுடன் செல்லும் போது அதன் கதி $8\ ms^{-1}$ ஆக இருக்கையில் ஆர்முடுகல் $1.015\ ms^{-2}$ எனக்காட்டுக. $(g = 10\ ms^{-2})$



$$P = Fv$$
$$8.16 \times 10^3 = F \times 16$$
$$F = 0.51 \times 10^3$$
$$F = 510 \quad 5$$

$$F = ma$$

$$\nearrow F - 10^3 \times 10 \sin\alpha - 16k = 1000 \times 0 \quad 5$$
$$510 - 500 = 16k$$
$$k = \frac{5}{8} \quad 5$$



$$P = Fv$$
$$8.16 \times 10^3 = F' \times 8$$
$$F' = 1.02 \times 10^3 \quad 5$$

$$F = ma$$

$$\rightarrow \quad F' - 8k = 1000f$$
$$1.02 \times 10^3 - 8 \times \frac{5}{8} = 1000f \quad 5$$
$$\rightarrow f = 1.015\ ms^{-2}$$

25

5. புள்ளி O இல் நிலைப்படுத்தப்பட்டுள்ள கப்பி மீது செல்லும் இலேசான நீட்டமுடியாத இழையின் ஒரு நுனியில் m திணிவுடைய துணிக்கை P உம் மற்றைய நுனியில் M திணிவுடைய துணிக்கை Q உம் இணைக்கப்பட்டு படத்தில் காட்டியவாறு இழை இறுக்கமாக இருக்க P ஆனது சீரான கோண வேகம(ω) உடன் கிடை வட்டத்தில் இயக்கப்படும் அதேவேளை, Q ஆனது O இற்கு நிலைக்குத்தாக கீழே சுயாதீனமாக தொங்கியவண்ணம் சமநிலையில் உள்ளது. $OP = l$ ஆகவும் $P\hat{O}Q = \alpha$ ஆகவும் இருப்பின் $\cos\alpha$ ஐ கண்டு $m < M$ என உய்த்தறிக.



மேலும் அத்துடன் $\omega = \sqrt{\frac{Mg}{ml}}$ எனவும் காட்டுக.



Q இன் சமநிலை

$\uparrow T = Mg$ ....(1)

P இற்கு

$\uparrow\ T\cos\alpha = mg$ ....(2)

5

$\frac{(2)}{(1)} \Longrightarrow \cos\alpha = \frac{m}{M}$ 5

ஆனால் $\cos\alpha < 1$

$\Longrightarrow \frac{m}{M} < 1$

$m < M$ 5

P இற்கு $F = ma$

$\leftarrow\ T\sin\alpha = m(l\sin\alpha)\omega^2$ 5

$mg = ml^2\omega^2$

$\Longrightarrow\ \omega = \sqrt{\frac{Mg}{ml}}$ 5

25

6. $\lambda, \mu \in \mathbb{R}$ ஆயிருக்க $\boldsymbol{u} = \lambda\boldsymbol{i} + \boldsymbol{j}, \boldsymbol{v} = \boldsymbol{i} + \mu\boldsymbol{j}$ எனக்கொள்வோம். இங்கு $\boldsymbol{i}, \boldsymbol{j}$ என்பன வழமையான குறியீட்டை உடையன. $\boldsymbol{u} + \boldsymbol{v}, \boldsymbol{u} - \boldsymbol{v}$ என்பன செங்குத்தான காவிகளாகவும் $|\boldsymbol{u} + \boldsymbol{v}| = 2|\boldsymbol{v}|$ ஆகவும் இருப்பின் λ, μ இன் பெறுமானங்களைக் காண்க.

$\boldsymbol{u} = \lambda\boldsymbol{i} + \boldsymbol{j}$, $\boldsymbol{v} = \boldsymbol{i} + \mu\boldsymbol{j}$

$\boldsymbol{u} + \boldsymbol{v} = (\lambda + 1)\boldsymbol{i} + (\mu + 1)\boldsymbol{j}$
$\boldsymbol{u} - \boldsymbol{v} = (\lambda - 1)\boldsymbol{i} - (\mu - 1)\boldsymbol{j}$

$\boldsymbol{u} + \boldsymbol{v} \perp \boldsymbol{u} - \boldsymbol{v} \implies (\boldsymbol{u} + \boldsymbol{v}) \cdot (\boldsymbol{u} - \boldsymbol{v}) = \boldsymbol{0}$ 5
$\implies [(\lambda + 1)\boldsymbol{i} + (\mu + 1)\boldsymbol{j}] \cdot [(\lambda - 1)\boldsymbol{i} - (\mu - 1)\boldsymbol{j}] = \boldsymbol{0}$

$(\lambda^2 - 1) - (\mu^2 - 1) = 0$
$\lambda^2 = \mu^2$ 5
$\implies \lambda = \pm\mu$ ....(1)

$|\boldsymbol{u} + \boldsymbol{v}| = 2|\boldsymbol{v}|$

$\implies \sqrt{(\lambda + 1)^2 + (\mu + 1)^2} = 2\sqrt{1 + \mu^2}$ 5

$(\lambda + 1)^2 + (\mu + 1)^2 = 4(1 + \mu^2)$ ....(2)

$(1) \implies \lambda = \mu$ எனின் $(1) \implies (\mu + 1)^2 \times 2 = 4(1 + \mu^2)$

$\mu^2 + 2\mu + 1 = 2(1 + \mu^2)$

$\mu^2 - 2\mu + 1 = 0$

$(\mu - 1)^2 = 0$

$\implies \mu = 1$ 5

$\therefore \lambda = \mu = 1$

$(1) \implies \lambda = -\mu$ எனின் $(1) \implies (-\mu + 1)^2 + (\mu + 1)^2 = 4(1 + \mu^2)$
$2(1 + \mu^2) = 4(1 + \mu^2)$

$1 + \mu^2 = 2(1 + \mu^2)$

$\implies \mu^2 = -1$ பொருந்தாது

$\therefore \lambda = \mu = 1$ 5

25

7. $3a$ நீளமான சீரற்ற W நிறையுடைய கோல் AB ஆனது ஒவ்வொன்றும் கிடையுடன் $30°$ இல் சாய்வுள்ள ஒப்பமான சாய்தளங்களில் கிடையாக வைக்கப்பட்டு படத்தில் காட்டிவாறு $\frac{aW}{2}$ திருப்பமுள்ள இணை கொடுக்கப்பட, அது அவ்வமைவில் சமநிலையில் உள்ளது. A, B இல் உள்ள மறுதாக்கங்கள் பருமனில் சமன் எனக்காட்டி, கோலின் புவியீர்ப்புமையம் எங்குள்ளது எனக்காண்க.



$\longrightarrow R\cos 60 - N\cos 60 = 0$ 5

$R = N$



$\uparrow R\sin 60 + N\sin 60 - W = 0$

$N = \frac{W}{\sqrt{3}}$ 5

$\curvearrowleft A \quad N \times 3a\sin 60 + \frac{aW}{2} - W \times x = 0$ 5

$\frac{W}{\sqrt{3}} \times 3a \times \frac{\sqrt{3}}{2} + \frac{aW}{2} = Wx$

$\Longrightarrow x = 2a$ 5

25

SLTC Northway Family Mart SUTHA INDUSTRIES (PVT) LTD

8. கிடையுடன் $45°$ இல் சாய்ந்துள்ள கரடான சாய்தளத்தின்உச்சியில் ஒப்பமான கப்பி நிலைப்படுத்தப்பட்டு, அதன் மீது செல்லும் இலேசான நீட்ட முடியாத இழையின் முனைகளில் $A(W), B(W)$ நிறைகளுடைய துணிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. இழை இறுக்கமாக இருக்க துணிக்கை. A ஆனது கப்பியினூடாகச் செல்லும் ஒப்பமான கிடை மேசை மீதும், துணிக்கை B ஆனது கரடான சாய்தளத்திலும் இருக்குமாறு அமைய துணிக்கை A இற்கு படத்தில் காட்டியவாறு கிடை விசை P பிரயோகிக்கப்பட தொகுதி சமநிலையில் உள்ளது. துணிக்கைகள், கப்பி என்பன ஒரே நிலைக்குத்து தளத்தில் இருக்கின்றன. துணிக்கை B, சாய்தளம் இடையிலான உராய்வுக்குணகம் $\frac{1}{2}$ எனின் $W \leq 2\sqrt{2}P \leq 3W$ எனக்காட்டுக.





5

$(A), \longrightarrow \quad P - T = 0 \Longrightarrow P = T$

$(B), \swarrow \quad F + W\cos 45 - T = 0$

$$\Longrightarrow F = P - \frac{W}{\sqrt{2}}$$ 5



$R - W\sin 45 = 0 \Longrightarrow R = \frac{W}{\sqrt{2}}$ 5

துணிக்கை B இன் சமநிலைக்கு

$\frac{|F|}{R} \leq \frac{1}{2} \Longrightarrow -\frac{1}{2} \leq \frac{F}{R} \leq \frac{1}{2}$ 5

$$\Longrightarrow -\frac{1}{2} \leq \frac{\left(P - \frac{W}{\sqrt{2}}\right)}{\frac{W}{\sqrt{2}}} \leq \frac{1}{2}$$ 5

$$\Longrightarrow -W \leq 2\sqrt{2}P - 2W \leq W$$

$$\Longrightarrow W \leq 2\sqrt{2}P \leq 3W$$

25

9. மாதிரி வெளி Ω இல் இரு நிகழ்வுகள் A, B என்பன $P(A|B) = \frac{1}{2}, P(A|B') = \frac{1}{3}$ ஆகுமாறுள்ளன. $6P(A) - P(B) = 2$ எனக்காட்டுக. மேலும் $P(A) = \frac{7}{18}$ எனின், A, B என்பன சாராதவை அல்ல எனவும் காட்டுக.

$P(A|B) = \frac{1}{2}$

$\Longrightarrow \frac{P(A\cap B)}{P(B)} = \frac{1}{2}$ 5

$\Longrightarrow P(A \cap B) = \frac{1}{2}P(B)$ ....(1)

$P(A|B') = \frac{1}{3}$

$\Longrightarrow \frac{P(A\cap B')}{P(B')} = \frac{1}{3}$ 5

$\Longrightarrow 3P(A \cap B') = P(B')$

$\Longrightarrow 3[P(A) - P(A \cap B)] = 1 - P(B)$ 5

$\Longrightarrow 6P(A) - P(B) = 2$

$P(A) = \frac{7}{18}$ எனின்

$6 \times \frac{7}{18} - P(B) = 2$

$\Longrightarrow P(B) = \frac{1}{3}$ 5

$(1) \Longrightarrow P(A \cap B) = \frac{1}{2} \times \frac{1}{3} = \frac{1}{6}$

$P(A) \cdot P(B) = \frac{7}{18} \times \frac{1}{3} = \frac{7}{54}$

$\therefore P(A \cap B) \neq P(A) \cdot P(B)$ 5

$\Longrightarrow A, B$ சாராதனவை அல்ல

25

10. x, y, z என்பன நிறை எண்களாக இருக்க $4, x, 6, y, 7, z, 13$ என்பன ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏழு நோக்கல்களாகும். இவற்றின் இடை 7 ஆகவும், இடையம் 6 ஆகவும் ஒரு ஆகாரத்தை மட்டும் கொண்டவையாகும். x, y, z இன் பெறுமானங்களைக் காண்க. இங்கு $z \neq 7$ அத்துடன் இவ் நோக்கல்களின் இடை விலகலைக் காண்க.

$4, x, 6, y, 7, z, 13$

$\therefore$ இடையம் $6 \implies y = 6$

இடை $= 7$

$$\frac{4 + x + 6 + y + 7 + z + 13}{7} = 7$$

$\implies x + z = 13$ ....(1) 5

$x = 5$ எனின் $(1) \implies z = 8$ 5

$x = 6$ எனின் $(1) \implies z = 7 \implies$ பொருந்தாது 5

$(\because z \neq 7)$

$\therefore \quad x = 5, y = 6, z = 8$

$4, 5, 6, 6, 7, 8, 13$

இடைவிலகல் $= \frac{\sum|x - \bar{x}|}{n}$

$= \frac{3+2+1+1+0+1+6}{7}$ 5

$= \frac{14}{7}$

$= 2$ 5

25

11)

a) ஒப்பமான கிடைத்தளத்தில் உள்ள நேர்கோடு ஒன்றில் A, B, C எனும் புள்ளிகள் படத்தில் காட்டியவாறு உள்ளன. இங்கு $AB = 280\ m$ ஆகும். புள்ளி A இல் P, Q எனும் இரு துணிக்கைகள் வைக்கப்பட்டு, துணிக்கை P ஆனது $t = 0$ இல் $50\ ms^{-1}$ எனும் வேகத்துடன் AB வழியே எறியப்பட அது $f\ ms^{-2}$ எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்கி $t = 4\ s$ இல் B இல் உள்ள நிலைக்குத்தான ஒப்பமான சுவரை $v\ ms^{-1}$ வேகத்துடன் செங்குத்தாக மோதி பின்னதைக்கிறது. துணிக்கை P, சுவர் இடையிலான மீள்தன்மைக் குணகம் $\frac{8}{9}$ ஆகும். துணிக்கை P இன் திரும்பிய இயக்கத்தில், அது $4\ ms^{-2}$ எனும் சீரான அமர்முடுகலுடன் இயங்குகின்றது.



$t = 4\ s$ இல் துணிக்கை Q ஆனது A இல் இருந்து AC வழியே $u\ ms^{-1}$ வேகத்துடன் இயக்கத்தை ஆரம்பித்து $4\ ms^{-2}$ எனும் சீரான அமர்முடுகலுடன் இயங்குகிறது. $t = T\ s$ இல் துணிக்கை P ஆனது துணிக்கை Q ஐ புள்ளி C இல் பிடிக்கிறது. அப்போது C இல் Q இன் கதி $12\ ms^{-1}$ ஆகும். இவ்விரு துணிக்கைகளின் இயக்கத்திற்கான வேக-நேர வரைபுகளை ஒரே வரைபடத்தில் பருமட்டியாக வரைக. இதிலிருந்து,

i. $v = 90, f = 10$ எனவும்

ii. $u = 40, T = 11\ or\ u = 52, T = 14$ எனவும் காட்டுக.



$\tan\theta = f$

$\Longrightarrow \frac{v-50}{4} = f$ ....(1) 5

சரிவகம் $ODEF$ பரப்பு $= 280$ 5

$\frac{1}{2}(50+v)\times 4 = 280$

$\Longrightarrow v = 90$ 5

$(1) \Longrightarrow f = 10$ 5

35

$v_0 = ev$

$v_0 = \frac{8}{9}\times 90$ 5

$= 80$

Q இற்கு $\tan\alpha = 4$

$\Longrightarrow \frac{u-12}{T-4} = 4$ 5

$u - 12 = 4T - 16$

$4T - u = 4$ .... (2)

சரிவகம் $FIKJ$ பரப்பு $-$ சரிவகம் $FIHG$ பரப்பு $= 280$ 5

$\Longrightarrow GHKJ$ பரப்பு $= 280$ 5

$(v_0 - u)(T-4) = 280$ 5

$(80 - u)(T-4) = 280$

$(80 + 4 - 4T)(T-4) = 280$

$(21 - T)(T-4) = 70$

$T^2 - 25T + 154 = 0$ 5

$(T-11)(T-14) = 0$

$\Longrightarrow T = 11$ or $T = 14$ 5

$T = 11$ எனின் $(2) \Longrightarrow u = 40$ 5

$T = 14$ எனின் $(2) \Longrightarrow u = 52$ 5

45

SLTC Learn. Research. Transform. Northway Family Mart SUTHA INDUSTRIES (PVT) LTD

b) சீரான வேகம் w உடன் பாயும் a அகலம் கொண்ட ஆற்றின் ஒரு கரையில் உள்ள புள்ளி A ஆகும். B என்பது A இருக்கும் கரையில் ஆற்றோட்ட திசையில் உள்ள புள்ளியாகும். C ஆனது A இற்கு நேர் எதிராக ஆற்றின் மறுகரையில் உள்ள புள்ளியாகும். இங்கு $AC = AB$ ஆகும். ஆறு தொடர்பாக u, v கதிகளையுடைய முறையே X, Y என்ற படகுகள் ஒரே நேரத்தில் முறையே A, B எனும் புள்ளிகளில் இருந்து புறப்பட்டு புள்ளி C ஐ அடைகின்றன. இங்கு $u > w\,, v > w$ ஆகும். இரு படகுகளின் இயக்கங்களிற்கான வேக முக்கோணிகளை வேறு வேறாக வரைந்து, படகு Y இன் கதி $\frac{1}{\sqrt{2}}\left(\sqrt{2v^2 - w^2} - w\right)$ எனக்காட்டி, படகு X இன் கதியைக் காண்க.



இரு படகுகளும் புள்ளி C ஐ அடைய எடுத்த நேரங்களைக் காண்க.

$u = \sqrt{2}w, v = \sqrt{5}w$ எனின் இவ்விரு படகுகளும் $\frac{a}{w}$ எனும் ஒரே நேரத்தில் C ஐ அடைகின்றன என உய்த்தறிக.

$$\left.\begin{aligned} V_{X,E} &= \uparrow\ v_1 \\ V_{Y,E} &= \nwarrow\ v_2 \end{aligned}\right\} \text{என்க}$$

$V_{X,R} = u\,, V_{Y,R} = v$



சார்பு வேக கோட்பாடு

$V_{Y,E} = V_{Y,R} + V_{R,E}$

$\nwarrow v_2 = v + \rightarrow w$ 5



10

Cos Rule

$v^2 = {v_2}^2 + w^2 - 2v_2 w\cos(180° - 45°)$ 5

${v_2}^2 + \sqrt{2}wv_2 + (w^2 - v^2) = 0$

$$v_2 = \frac{-\sqrt{2}w \pm \sqrt{2w^2 - 4(w^2 - v^2)}}{2\times 1}$$

$$= \frac{-w \pm \sqrt{2v^2 - w^2}}{\sqrt{2}}$$

$$v_2 = \frac{\sqrt{2v^2 - w^2} - w}{\sqrt{2}} \quad \because\ v_2 > 0$$ 5

$V_{X,E} = V_{X,R} + V_{R,E}$

$\uparrow v_1 = u + \rightarrow w$ 5

$v_1 = \sqrt{u^2 - w^2}$ 5



10

படகு X ஆனது C ஐ அடைய நேரம்

$T_1 = \frac{a}{v_1} = \frac{a}{\sqrt{u^2-w^2}}$ .... (1) 5

படகு Y ஆனது C ஐ அடைய நேரம்

$T_1 = \frac{\sqrt{2}a}{v_2} = \frac{2a}{\sqrt{2v^2-w^2}-w}$ .... (2) 5

$u = \sqrt{2}w$ எனின் $(1) \Longrightarrow T_1 = \frac{a}{\sqrt{2w^2-w^2}} = \frac{a}{w}$ 5

$v = \sqrt{5}w$ எனின் $(2) \Longrightarrow T_2 = \frac{2a}{\sqrt{2\times5w^2-w^2}-w} = \frac{a}{w}$ 5

$\therefore\ T_1 = T_2 = \frac{a}{w}$ 5

70

150

12.(a) X, Y எனும் இரு ஒப்பமான சீரான ஆப்புகளினதும் துணிக்கை P இனதும் திணிவு மையங்களினூடாக உள்ள நிலைக்குத்துக் குறுக்குவெட்டு உருவிற் காட்டப்பட்டுள்ளது. AC, DE, GE என்பன அவை இருக்கும் முகங்களின் அதியுயர் சரிவுக்கோடுகளாக இருக்கும் அதேவேளை $B\hat{A}C = D\hat{E}G = \alpha$ ஆகும். துணிக்கை P, ஆப்புகள் ஒவ்வொன்றினதும் திணிவுகள் m ஆகும். ஆப்பு X இன் AB ஐக் கொண்ட முகம் ஓர் ஒப்பமான கிடை மேசை மீது வைக்கப்பட்டுள்ளது. ஆப்பு Y இன் ED ஐக் கொண்டுள்ள முகம் X இன் AC ஐ கொண்ட முகத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது. C இல் நிலைப்படுத்தப்பட்டுள்ள ஒரு சிறிய ஒப்பமான இலேசான கப்பிக்கு மேலாகச் செல்லும் ஓர் இலேசான நீட்ட முடியாத இழையின் ஒரு நுனி, ஆப்பு Y இல் புள்ளி E இற்கும் மறுமுனை நிலையான சுவரில் உள்ள புள்ளி H இற்கு இணைக்கப்பட்டுள்ள அதே வேளை இழையின் பகுதி CH கிடையாகவும் ஆப்புகளின் நிலைக்குத்து குறுக்குவெட்டு தளத்திலும் உள்ளது. துணிக்கை P ஆனது GE மீது வைக்கப்பட்டுள்ளது. இழை இறுக்கமாக இருக்க தொகுதி ஓய்வில் இருந்து விடுவிக்கப்படுகிறது. ஆப்புகளின் ஆர்முடுகலைத் துணிவதற்கு போதிய சமன்பாடுகளை எழுதுக.





$x + y =$ மாறிலி $\Longrightarrow \ddot{x} + \ddot{y} = 0$ .... (1) 5

$a_{X,E} = \rightarrow F$ என்க $(\ddot{x} = -F)$

$\therefore$ (1) $\Longrightarrow a_{Y,X} = \swarrow F$ 5

$\Longrightarrow a_{Y,E} =$



5

$a_{P,Y} = \longleftarrow f$ என்க

$\Longrightarrow a_{P,E} =$



5

$F = ma$

$(P), \rightarrow 0 = (F - f - F\cos\alpha)m$ 10

Y, P இற்கு

$\swarrow$ $2(mg\sin\alpha) - T = m(F - F\cos\alpha) + m(F + f\cos\alpha - F\cos\alpha)$ 15

தொகுதி

$\rightarrow$ $T = mF + m(F - F\cos\alpha) + m(F - F\cos\alpha - f)$ 15

35

b) a நீளமுள்ள இலேசான நீட்ட முடியாத இழையின் ஒரு முனை புள்ளி O இல் நிலைப்படுத்தப்பட்டு, மறுமுனையில் m திணிவுடைய துணிக்கை P இணைக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் O இன் மட்டத்தில் இழை இறுக்கமாக இருக்க துணிக்கை P பிடிக்கப்பட்டு ஓய்வில் இருந்து விடப்படுகிறது. தொடரும் இயக்கத்தில் துணிக்கை P ஆனது O இற்கு நிலைக்குத்தாக கீழே நிலைப்படுத்தப்பட்ட கம்பம் AB இன் உச்சி A இல் வைக்கப்பட்டுள்ள m திணிவுடைய துணிக்கை Q உடன் கிடையாக மோதுகிறது. இங்கு $OA = a, AB = H$ ஆகும். மொத்தலின் பின்னரான P, Q இன் இயக்கங்களில் P ஆனது தொடர்ந்து வட்ட இயக்கத்தை ஆற்றி புள்ளி C இல் கணநிலை ஓய்விற்கு வருகிறது. துணிக்கை Q ஆனது புவியீர்ப்பின் கீழ் இயங்கி புள்ளி C இற்கு நிலைக்குத்தாக கீழே B இன் மட்டத்தில் உள்ள புள்ளி D இல் தரையை அடிக்கிறது. துணிக்கைகள் P, Q இற்கிடையில் உள்ள மீள்தன்மைக்குணகம் $\frac{1}{2}$ ஆகும்.



i. துணிக்கை P ஆனது துணிக்கை Q உடன் மோதுவதற்கு சற்று முன் அதன் கதியைக் கண்டு, மோதி சற்று பின் P, Q இன் கதிகள் முறையே $\frac{\sqrt{2ag}}{4}, \frac{3\sqrt{2ag}}{4}$ எனக்காட்டுக.

ii. A இன் மட்டத்திற்கு மேல் C இன் உயரம் $\frac{a}{16}$ எனக்காட்டி, $H = \frac{31}{576}a$ எனவும் காட்டுக.

P இற்கு $(S_1 \longrightarrow S_2)$ சக்திக்காப்பு விதி

$0 \ = \frac{1}{2}m{u_0}^2 - mga$ 10

$u_0 = \sqrt{2ga}$ 5



P, Q இற்கு

$I = \Delta(mu)$

$\longrightarrow \ 0 = (mu + mv) - (mu_0 + m \times 0)$ 10

$u + v = u_0$ .... (1)

நியூட்டனின் பரிசோதனை விதிப்படி

$v - u = \frac{1}{2}(u_0 + 0)$ 10

$v - u = \frac{1}{2}u_0$ .... (2)

$$(1) + (2) \Rightarrow v = \frac{3u_0}{4} \Rightarrow v = \frac{3}{4}\sqrt{2ag}$$ 5

$$(1) - (2) \Rightarrow u = \frac{u_0}{4} = \frac{\sqrt{2ag}}{4}$$ 5

45

P இற்கு $(S_2 \longrightarrow S_3)$ சக்திக்காப்பு விதிப்படி

$$\frac{1}{2}mu^2 - mgh = 0$$ 10

$$h = \frac{1}{2g} \times \frac{2ag}{16}$$

$$= \frac{a}{16}$$ 5

$$\cos\alpha = \frac{15a}{16} \times \frac{1}{a}$$

$$\cos\alpha = \frac{15}{16}$$ 5



Q இற்கு,

$$(A \longrightarrow B), S = ut + \frac{1}{2}gt^2$$

$$\longrightarrow a\sin\alpha = vt + 0$$ 5

$$t = \frac{a\sin\alpha}{v}$$

$$\downarrow H = 0 + \frac{1}{2}gt^2$$ 5

$$= \frac{1}{2}g \times \left(\frac{a\sin\alpha}{v}\right)^2$$

$$= \frac{ga^2}{2} \times \frac{16}{9 \times 2ag} \times \frac{31}{256}$$

$$\Rightarrow H = \frac{31a}{576}$$ 5

35

150

---

13) இயற்கை நீளம் l ஐ உடைய ஓர் இலேசான மீள்தன்மை இழையின் ஒரு நுனி ஓர் ஒப்பமான கிடை நிலத்திற்கு மேலே $\frac{7l}{4}$ இல் இருக்கும் நிலைத்த புள்ளி O உடனும் மற்றைய நுனி ஒவ்வொன்றும் m திணிவுகளையுடைய இரு துணிக்கைகள் சேர்த்து ஒட்டப்பட்ட $2m$ திணிவுடைய சேர்த்தி துணிக்கை P உடனும் இணைக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் துணிக்கை P ஆனது O இல் வைத்திருக்கப்பட்டு ஓய்விலிருந்து விடப்படுகிறது. புள்ளி O இற்கு நிலைக்குத்தாக கீழே A, C_0, C, D ஆகிய புள்ளிகள் $OA = l, AC_0 = C_0C = CD = \frac{l}{4}$ ஆகுமாறுள்ளன. துணிக்கை P இன் இயக்கத்தில் புள்ளி C சமநிலைத்தானமாக அமையின் இழையின் மீள்தன்மை மட்டு $4mg$ எனக்காட்டுக.
மேலும் துணிக்கை P இன் இயக்கச்சமன்பாடு $\ddot{x} = -\omega^2 x$ எனக்காட்டுக.
இங்கு $-\frac{l}{2} \leq x \leq \frac{l}{4}$ இற்கு $CP = x$ ஆக இருக்கும் அதேவேளை, $\omega(> 0)$ துணியப்பட வேண்டிய மாறிலியாகும்.
c வீச்சமாக இருக்க $\dot{x}^2 = \omega^2(c^2 - x^2)$ ஐப் பயன்படுத்தி வீச்சம் c ஐக் கண்டு, துணிக்கை P ஆனது நிலத்தில் புள்ளி D ஐ $\frac{\sqrt{38gl}}{4}$ எனும் கதியுடன் அடிக்கும் எனக்காட்டுக.

துணிக்கை P ஆனது நிலத்தை அடிக்கும் போது m திணிவுள்ள துணிக்கை இழையில் இருந்து தொடுகையற்று செல்கிறது. இழையுடன் தொடுகையில் உள்ள மற்றைய துணிக்கை Q ஆனது நிலைக்குத்தாக மேல்நோக்கி $\frac{\sqrt{5gl}}{2}$ எனும் வேகத்திலிருந்து இயக்கத்தை தொடர்கிறது. $-\frac{l}{4} \leq y \leq \frac{l}{2}$ இற்கு $C_0Q = y$ என எடுத்து, இப்புதிய எளிமை இசை இயக்கச் சமன்பாட்டைப் பெற்று, அதன் வீச்சம் $\frac{3l}{4}$ எனக்காட்டுக. அத்துடன் துணிக்கை Q ஆனது புள்ளி O ஐ மட்டுமட்டாக அடையும் எனக்காட்டுக. மேலும் துணிக்கை Q ஆனது D இலிருந்து O இனை அடைய எடுக்கும் நேரம் $\frac{1}{2}\sqrt{\frac{l}{g}}\left[\pi - \cos^{-1}\frac{1}{3} - \cos^{-1}\frac{2}{3} + 2\sqrt{2}\right]$ எனக்காட்டுக.

Hooke's Law

$$T = \lambda \times \frac{l/2}{l}$$

$$= \frac{\lambda}{2} \quad 5$$

சமநிலையில்

$$\uparrow T = 2mg \quad 5$$

$$\frac{\lambda}{2} = 2mg$$

$$\lambda = 4mg \quad 5$$

15



புவியீர்ப்பின் கீழ் இயக்கத்தில்

$v^2 = u^2 + 2as$

$\downarrow u^2 = 0 + 2gl$ 5

$u = \sqrt{2gl}$

Hooke's Law

$T_1 = \frac{4mg(l/_2+x)}{l}$ 5

$F = ma$

$\downarrow\ 2mg - T_1 = 2m\ddot{x}$

$2mg - \frac{4mg(l/_2+x)}{l} = 2m\ddot{x}$ 5

$\ddot{x} = -\frac{2g}{l}x$ 5

$\ddot{x} = -\omega^2 x$; இங்கு $\omega^2 = \frac{2g}{l} \Longrightarrow \omega = \sqrt{\frac{2g}{l}}$; $\because\ \omega > 0$

5

S.H.M

$x = 0$ இல் அலைவு மையம் $\Longrightarrow C$ அலைவு மையம்

$\dot{x}^2 = \omega^2(c^2 - x^2)$ .... (1)

$x = -\frac{l}{2}$ இல் $\dot{x} = u = \sqrt{2gl}$

$2gl = \frac{2g}{l}(c^2 - \frac{l^2}{4})$ 5

$c = \frac{\sqrt{5}}{2}l$ 5

$x = \frac{l}{4}$ இல் $\dot{x} = v_1$ என்க

$(1) \Longrightarrow \; v_1^{\,2} = \frac{2g}{l}\left(\frac{5l^2}{4} - \frac{l^2}{16}\right)$ 5

$v_1 = \frac{\sqrt{38gl}}{4}$ 5

45

துணிக்கை Q இன் இயக்கத்தில்

Hooke's Law

$T_2 = \frac{4mg(l/_4+y)}{l}$ 5



$F = ma$

$\downarrow \; mg - T_2 = m\ddot{y}$ 5

$mg - \frac{4mg(l/_4+y)}{l} = m\ddot{y}$

$\ddot{y} = -\frac{4g}{l}y$

$\ddot{y} = -\omega_0^{\,2}y$; இங்கு $\omega_0^{\,2} = \frac{4g}{l} \Longrightarrow \omega_0 = \sqrt{\frac{4g}{l}}$; $\because \; \omega_0 > 0$

S.H.M 5 5

$y = 0$ இல் அலைவு மையம் $\Longrightarrow C_0$ அலைவு மையம்

5

$\dot{y}^2 = \omega_0^{\,2}(c_0^{\,2} - y^2)$ ....(2)

$y = \frac{l}{2}$ இல் $\dot{y} = -\frac{\sqrt{5gl}}{2}$

$\left(\frac{\sqrt{5gl}}{2}\right)^2 = \frac{4g}{l}(c_0^{\,2} - \frac{l^2}{4})$ 5

$c_0 = \frac{3}{4}l$ 5

35

SLTC Northway Family Mart SUTHA INDUSTRIES (PVT) LTD

$y = -\frac{l}{4}$ இல் $\dot{y} = u_0$ என்க

$(2) \Rightarrow \ \ {u_0}^2 = \frac{4g}{l}\left(\frac{9l^2}{16} - \frac{l^2}{16}\right)$ 5

$u_0 = \sqrt{2gl}$ 5

புவியீர்ப்பின் கீழ் இயக்கத்தில்

$v^2 = u^2 + 2as$

$\uparrow 0 = {u_0}^2 - 2gh$ 5

$2gh = 2gl$

$h = l$ 5

$\therefore O$ ஐ மட்டுமட்டாக அடையும்

20

$\cos\theta = \frac{l/4}{3l/4} = \frac{1}{3}$

$\cos\gamma = \frac{l/2}{3l/4} = \frac{2}{3}$



5

துணிக்கை Q ஆனது $D \longrightarrow A$ செல்ல எடுக்கும் நேரம் t_1 என்க.

$t_1 = \frac{\pi - (\theta+\gamma)}{\omega_0}$ 5

$t_1 = \frac{1}{2}\sqrt{\frac{l}{g}}\left[\pi - \cos^{-1}\left(\frac{1}{3}\right) - \cos^{-1}\left(\frac{2}{3}\right)\right]$ 10

துணிக்கை Q ஆனது $A \longrightarrow O$ செல்ல எடுக்கும் நேரம் t_2 என்க.

$\uparrow v = u + at$

$0 = \sqrt{2gl} - gt_2 \ \ \Rightarrow t_2 = \sqrt{\frac{2l}{g}}$ 5

மொத்த நேரம் $= \frac{1}{2}\sqrt{\frac{l}{g}}\left[\pi - \cos^{-1}\left(\frac{1}{3}\right) - \cos^{-1}\left(\frac{2}{3}\right)\right] + \sqrt{\frac{2l}{g}}$ 5

$= \frac{1}{2}\sqrt{\frac{l}{g}}\left[\pi - \cos^{-1}\frac{1}{3} - \cos^{-1}\frac{2}{3} + 2\sqrt{2}\right]$ 5

35

150

14)

a) $\overrightarrow{AB} = \boldsymbol{a}, \overrightarrow{AC} = \boldsymbol{b}, \boldsymbol{B\widehat{A}C} = \frac{\pi}{3}$ ஆகுமாறு ABC ஒரு முக்கோணியாகும். A யினூடாக BC இற்கு செங்குத்தாக வரையப்பட்ட கோடும் B இனூடு AC இற்கு சமாந்தரமாக வரையப்பட்ட கோடும் புள்ளி E இல் இடைவெட்டுகின்றன. கோடு AE ஆனது பக்கம் BC ஐ வெட்டும் புள்ளி D ஆகும். மேலும் $CD: CB = \lambda: 1$ ஆகும். இங்கு $\lambda \in \mathbb{R}$. $\overrightarrow{AD} = \lambda\boldsymbol{a} + (1-\lambda)\boldsymbol{b}$ எனக்காட்டுக. $|\boldsymbol{a}| = 2, |\boldsymbol{b}| = 3$ எனின், $\lambda = \frac{6}{7}$ எனக்காட்டுக. $AE: AD = \mu: 1$; $\mu \in \mathbb{R}$ எனின், ΔABE இல் காவிக்கூட்டல் விதியைப் பயன்படுத்தி μ ஐக் காண்க. $AE: DE = 7: 1$ என உய்த்தறிக.

ΔABC இல்



$\overrightarrow{CB} = \overrightarrow{CA} + \overrightarrow{AB}$

$= -\boldsymbol{b} + \boldsymbol{a}$ 5

$\overrightarrow{CB} = \boldsymbol{a} - \boldsymbol{b}$

$CD: CB = \lambda: 1$

$\Longrightarrow \frac{CD}{CB} = \lambda$

$\Longrightarrow \overrightarrow{CD} = \lambda\overrightarrow{CB} = \lambda(\boldsymbol{a} - \boldsymbol{b})$ 5

ΔACD இல்

$\overrightarrow{AD} = \overrightarrow{AC} + \overrightarrow{CD}$

$= \boldsymbol{b} + \lambda(\boldsymbol{a} - \boldsymbol{b})$

$\overrightarrow{AD} = \lambda\boldsymbol{a} + (1-\lambda)\boldsymbol{b}$ ....(1) 5

$AD \perp CB \Longrightarrow \overrightarrow{AD} \cdot \overrightarrow{CB} = 0$ 5

$[\lambda\boldsymbol{a} + (1-\lambda)\boldsymbol{b}] \cdot (\boldsymbol{a} - \boldsymbol{b}) = 0$

$\lambda(a \cdot a) + (1-\lambda)(\boldsymbol{a}.\boldsymbol{b}) - \lambda(\boldsymbol{a}.\boldsymbol{b}) - (1-\lambda)(\boldsymbol{b}.\boldsymbol{b}) = 0$ 5

$\lambda|\boldsymbol{a}|^2 + (1-2\lambda)|\boldsymbol{a}||\boldsymbol{b}|\cos\frac{\pi}{3} - (1-\lambda)|\boldsymbol{b}|^2 = 0$ 5

$|\boldsymbol{a}| = 2, |\boldsymbol{b}| = 3 \Rightarrow \lambda \times 4 + (1-2\lambda) \times 2 \times 3 \times \frac{1}{2} - (1-\lambda) \times 9 = 0$

$4\lambda + 3 - 6\lambda - 9 + 9\lambda = 0$

$7\lambda = 6$

$\lambda = \frac{6}{7}$ 5

35

$\overrightarrow{AD} = \frac{6}{7}\boldsymbol{a} + \frac{1}{7}\boldsymbol{b}$

$BE // AC \implies \overrightarrow{BE} = \gamma\overrightarrow{AC} = \gamma\boldsymbol{b}$; இங்கு $\gamma \in \mathbb{R}$

5

$AE : AD = \mu : 1$

$\implies \frac{AE}{AD} = \mu$

$\implies \overrightarrow{AE} = \mu\overrightarrow{AD}$

$\overrightarrow{AE} = \mu\left(\frac{6}{7}\boldsymbol{a} + \frac{1}{7}\boldsymbol{b}\right)$ 5

$\Delta ABE \implies \overrightarrow{AE} = \overrightarrow{AB} + \overrightarrow{BE}$ 5

$\implies \mu\left(\frac{6}{7}\boldsymbol{a} + \frac{1}{7}\boldsymbol{b}\right) = \boldsymbol{a} + \gamma\boldsymbol{b}$

$\implies \frac{6}{7}\mu\boldsymbol{a} + \frac{1}{7}\mu\boldsymbol{b} = \boldsymbol{a} + \gamma\boldsymbol{b}$ 5

But $\boldsymbol{a} \neq \boldsymbol{0}, \boldsymbol{b} \neq \boldsymbol{0}$ and $\boldsymbol{a} \nparallel \boldsymbol{b}$

$\boldsymbol{a} \implies \frac{6}{7}\mu = 1 \implies \mu = \frac{7}{6}$ 5

$\frac{AE}{AD} = \frac{7}{6} \implies AE : DE = 7 : 1$ 5

30

SLTC Learn. Research. Transform. Northway Family Mart SUTHA INDUSTRIES (PVT) LTD

b) O உற்பத்தியாக உள்ள போது $OA = 4\,m, AB = 3\,m$ ஆகுமாறு $OABC$ ஒரு செவ்வகம் ஆகும். OA இன் நடுப்புள்ளி D ஆகும். $OA, BA, CB, OC, AC, BO, DB$ வழியே எழுத்து ஒழுங்கு முறையினால் காட்டப்படும் திசைகளில் முறையே $P, 7, 2, Q, 15, 10, \sqrt{13}\alpha\ N$ பருமனுள்ள விசைகள் தாக்குகின்றன. இத்தொகுதி புள்ளி O இல் விசை ஒன்றுடன் சேர்ந்து இடஞ்சுழியாக $20Nm$ பருமனுள்ள இணையிற்கு சமவலுவுள்ளதென தரப்பட்டுள்ளது. $\alpha = 3$ எனக்காட்டுக.



மேலும் தொகுதியின் விளையுளானது $\overrightarrow{OB}$ இற்கு சமாந்தரமாக OA இல் புள்ளி E இல் தாக்கின் P, Q இன் பெறுமானங்களைக் கண்டு, விளையுளின் பருமனைக் காண்க.

இங்கு $OE = \frac{10}{3}m$ ஆகும். அத்துடன் விளையுளின் தாக்கக்கோட்டின் சமன்பாடு $3x - 4y - 10 = 0$ எனக்காட்டுக. இப்போது தொகுதியுடன் ஓர் இணையானது, புதிய தொகுதியின் விளையுளின் தாக்கக்கோடு புள்ளி A இனூடு செல்லுமாறு சேரக்கப்படுகிறது. சேர்த்த இணையினைக் காண்க.



$\circlearrowleft O \quad 20 = -7 \times 4 - 2 \times 3 + 15 \times 4 \sin\theta + \sqrt{13}\alpha \times 2\sin\alpha$ 10

$20 = -28 - 6 + 15 \times 4 \times \frac{3}{5} + \sqrt{13}\alpha \times 2 \times \frac{3}{\sqrt{13}}$

$20 = 2 + 6\alpha$

$\alpha = 3$ 5

15

$\rightarrow X = P + 2 - 10\cos\theta - 15\cos\theta + \sqrt{13}\alpha\cos\alpha$ 10

$= P + 2 - 25 \times \frac{4}{5} + \sqrt{13} \times 3 \times \frac{2}{\sqrt{13}}$

$\rightarrow X = P - 12$ ....(1) 5

$\uparrow Y = Q - 7 - 10\sin\theta - 15\sin\theta + \sqrt{13}\alpha\sin\alpha$ 10

$= Q - 7 + 5 \times \frac{3}{5} + \sqrt{13} \times 3 \times \frac{3}{\sqrt{13}}$

$\uparrow Y = Q + 5$ ....(2) 5

விளையுள் $//\ \overrightarrow{AC}$



$\therefore \tan\theta = \frac{Y}{X}$ 5

$\Rightarrow \quad \frac{3}{4} = \frac{Q+5}{P-12}$

$3P - 36 = 4Q + 20$

$3P - 4Q = 56$ ....(3) 5

$\circlearrowleft O \quad 20 = Y \times \frac{10}{3}$ 5

$Y = 6$

$\Rightarrow 6 = Q + 5$

$Q = 1$

$(3) \Rightarrow P = 20$ 5



$X = \left(\frac{10}{3}, 0\right)$, படித்திறன் $= \tan\theta = \frac{3}{4}$

$\therefore$ தாக்க கோட்டின் சமன்பாடு

$\Rightarrow y - 0 = \frac{3}{4}\left(x - \frac{10}{3}\right)$ 5

$\Rightarrow 12y = 9x - 30$

$\Rightarrow 3x - 4y - 10 = 0$

55

$(1) \Longrightarrow X = 8, (2) \Longrightarrow Y = 6 \Longrightarrow$ விளையுள் $R = \sqrt{X^2 + Y^2} = 10N$ 5



$\curvearrowleft B \quad R' \times 0 = M - 10 \times \frac{2}{3}\sin\theta$ 5

$M = 10 \times \frac{2}{3} \times \frac{3}{5}$

$M = 4\ Nm \curvearrowleft$ 5

15

150

15)

a) சமநீளம் $4a$ ஐயும் சமநிறை W ஐயும் உடைய AB, BC, CD என்னும் மூன்று சீரான கோல்களும் $3W$ நிறையுடைய ED என்ற சீரான கோலும் B, C, D ஆகிய முனைப்புள்ளிகளில் ஒப்பமாக மூட்டப்பட்டுள்ளன. முனை A ஒரு நிலைத்த புள்ளியில் ஒப்பமாக பிணைக்கப்பட்டுள்ளது. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு $CH = DG = a, A\hat{B}C = B\hat{C}D = 120°,\ C\hat{D}E = 90°$ ஆகவும் கோல் BC கிடையாகவும், BC இன் நடுப்புள்ளி I இற்கு நிலைக்குத்தாக கீழே கோல் DE இன் நடுப்புள்ளி J இருக்குமாறும் $EF = FJ$ ஆகவும் இருக்க நான்கு கோல்களும் ஒரு நிலைக்குத்து தளத்தில் இருக்க F, G, H ஆகிய ஒப்பமான நிலைத்த முளைகளில் பொறுத்திருக்கவும் கோல் AB இன் நடுப்புள்ளியில் பிரயோகிக்கப்படும் கிடை விசை P இனாலும் சமநிலையில் உள்ளது.

I. முளை F இனால் கோல் DE மீது உஞற்றப்படும் மறுதாக்கத்தின் பருமன் $\sqrt{3}W$ எனக்காட்டுக.

II. முளை G இனால் கோல் CD மீது உஞற்றப்படும் மறுதாக்கத்தின் பருமன் $\frac{7}{3}W$ எனக்காட்டுக.

III. கோல் BC மீது மூட்டு C இல் உள்ள மறுதாக்கத்தின் கிடை, நிலைக்குத்துக் கூறுகளைக் கண்டு, முளை H இனால் கோல் BC மீது உஞற்றப்படும் மறுதாக்கத்தின் பருமன் $\frac{22}{9}W$ எனக்காட்டுக.

IV. P இன் பருமனைக் காண்க.



கோல் ED இற்கு $\curvearrowleft D$

$3W \times \frac{8a}{\sqrt{3}} \cos 30 - R_1 \times \frac{12a}{\sqrt{3}} = 0$ 5

$3W \times 2 \times \frac{\sqrt{3}}{2} = 3R_1$

$\Longrightarrow R_1 = \sqrt{3}W$ 5

15

கோல்கள் CD, DE இற்கு $\curvearrowleft C$

$R_2 \times 3a - W \times 2a \sin 30 + 3W \times 2a - R_1 \times \frac{12a}{\sqrt{3}} = 0$ 10

$3R_2 - W + 6W - 12W = 0$

$\Longrightarrow R_2 = \frac{7}{3}W$ 5

15

கோல்கள் CD, DE இற்கு

$\rightarrow \quad R_2 \cos 30 - R_1 \cos 60 - X = 0$ 5

$\frac{7}{3}W \times \frac{\sqrt{3}}{2} - \sqrt{3}W \times \frac{1}{2} = X$

$\Longrightarrow X = \frac{2\sqrt{3}}{3}W$ 5

$\uparrow \quad Y + R_2 \sin 30 + R_1 \sin 60 - W - 3W = 0$ 5

$Y + \frac{7}{3}W \times \frac{1}{2} + \sqrt{3}W \times \frac{\sqrt{3}}{2} - 4W = 0$

$\Longrightarrow Y = \frac{4}{3}W$ 5

கோல் BC இற்கு $\curvearrowleft B$

$R_3 \times 3a - W \times 2a - Y \times 4a = 0$ 5

$3R_3 = 2W + \frac{16}{3}W$

$R_3 = \frac{22}{9}W$ 5

30

கோல்கள் AB, BC இற்கு $\curvearrowleft A$

$$P \times 2a \sin 60 + R_3 \times (4a \cos 60 + 3a) - Y \times (4a \cos 60 + 4a)$$

$$-W \times 2a \cos 60 - W \times (4a \cos 60 + 2a) - X \times 4a \cos 30 = 0 \quad 15$$

$$\Rightarrow \sqrt{3}P + \frac{22}{9}W \times 5 - \frac{4}{3}W \times 6 - W - 4W - \frac{2\sqrt{3}}{3}W \times 2\sqrt{3} = 0$$

$$\Rightarrow P = \frac{43}{\sqrt{3}}W \quad 5$$

20

---

b) உருவில் காட்டப்பட்டுள்ள சட்டப்படல் முனைகளில் ஒப்பமாக மூட்டப்பட்ட AB, BC, AC, CD எனும் நான்கு இலேசான கோல்களைக் கொண்டுள்ளது. $AB = BC = CA, A\hat{C}D = 90°$ ஆகும். சட்டப்படல் நிலைக்குத்து சுவரில் A இலும் D இலும் ஒப்பமாக பிணைக்கப்பட்டுள்ளன. B இல் சுமை W தொங்கவிடப்பட்டு AB கிடையாக இருக்க சட்டப்படல் ஒரு நிலைக்குத்து தளத்தில் சமநிலையில் உள்ளது. போவின் குறிபீட்டைப் பயன்படுத்தி B, C ஆகிய மூட்டுகளிற்கு தகைப்பு வரிப்படத்தை வரைக. இதிலிருந்து,

I. கோல்களில் உள்ள தகைப்புகளை இனங்கண்டு அவற்றின் பெறுமானங்களைக் காண்க.

II. மூட்டு D இல் உள்ள மறுதாக்கத்தைக் காண்க.





கோல்கள்	தகைப்பு	
	இழுவை	உதைப்பு
AB	$-$	$\frac{W}{\sqrt{3}}$
BC	$\frac{2W}{\sqrt{3}}$	$-$
AC	$-$	$\frac{W}{\sqrt{3}}$
CD	W	$-$

5 + 5
5 + 5
5 + 5
5 + 5

மூட்டு D இல் மறுதாக்கம் $\overrightarrow{CD}$ வழியே $=$ 2 3

5 $= W$

5

70

150

16) ஆரை $2a$ ஐ உடைய சீரான திண்ம அரை கோளம் ஒன்று, அடியின் மையம் O விலிருந்து ஒரு தூரம் a இல் அதன் அச்சிற்கு செங்குத்தான தளம் ஒன்றினால் இரு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. இரு வட்ட ஓரங்களைக் கொண்ட பகுதி R இன் திணிவு $\frac{11}{3}\pi a^3\sigma$ என தொகையிடல் மூலம் காட்டி, அதன் திணிவுமையம் அச்சின் மீது O விலிருந்து $\frac{21}{44}a$ எனக்காட்டுக. இங்கு σ என்பது அலகு கனவளவிற்கான திணிவாகும்.

சீரான திண்மக்கூம்பு ஒன்றின் திணிவுமையம் அடியில் இருந்து அச்சின் வழியே $1:3$ எனும் விகிதத்தில் இருக்கும் எனக்காட்டுக.

ஆரை $2a$, உயரம் h, அடர்த்தி σ ஆகியவற்றை உடைய ஒரு சீரான திண்ம செவ்வட்ட உருளையில் இருந்து மேலே கூறப்பட்ட பகுதி R நீக்கப்பட்டு, படத்தில் காட்டியவாறு மறு பகுதியுடன் இணைக்கப்பட்டு, பகுதி R இன் சிறிய வட்ட ஓரத்துடன் ஆரை $\sqrt{3}a$, உயரம் $2h$, அடர்த்தி σ ஆகியவற்றையுடைய சீரான திண்மக் கூம்பும் இணைக்கப்பட்டு ஒரு திண்ம சேர்த்திப்பொருள் உருவாக்கப்படுகிறது. இங்கு உருளையின் அச்சு, பகுதி R இன் அச்சு, கூம்பின் அச்சு என்பன ஒரே கோடாகும். இச்சேர்த்திப் பொருளின் திணிவு மையம் O வில் இருந்து சமச்சீர் அச்சு வழியே $\frac{(15h+17a)}{18}$ தூரத்தில் உள்ளது எனக்காட்டுக.

$h = 2a$ எனின், சேர்த்திப் பொருளானது புள்ளி P இல் ஒரு இழையால் கட்டி தொங்க விடும் போது சேர்த்தி பொருளின் சமச்சீர் அச்சு கிடையாக இருக்க சமநிலையில் இருப்பதற்கு கூம்பின் உச்சியில் இணைக்கப்பட வேண்டிய நிறை $\frac{7W}{72}$ எனக்காட்டுக. இங்கு W ஆனது சேர்த்திப்பொருளின் நிறையாகும்.

R ஐ δx தடிப்புடைய வட்டதட்டுகளாக (கீலங்களாக) பிரிக்க.



கீலத்தின் திணிவு $m_i = \pi\left(\sqrt{4a^2-x^2}\right)^2 \delta x\, \sigma$

$$m_i = \pi\,\sigma(4a^2-x^2)\delta x \quad 5$$

R இன் திணிவு $= \sum m_i$

$$= \sum \pi\,\sigma(4a^2-x^2)\delta x$$

$$= \pi\,\sigma\sum(4a^2-x^2)\delta x \quad 5$$

$$= \pi\,\sigma\int_0^a (4a^2-x^2)\,dx$$

$$= \pi\,\sigma\left[4a^2x-\frac{x^3}{3}\right]_0^a \quad 5$$

$$= \pi\,\sigma\left[\left(4a^2\cdot a-\frac{a^3}{3}\right)-0\right]$$

$\Longrightarrow R$ இன் திணிவு $= \frac{11}{3}\pi a^3 \sigma$ 5

கீலத்தின் திணிவுமையம் G_i அதன் மையத்தில் உண்டு

$\therefore\ OG_i = x_i = x$

சமச்சீரின் படி R இன் திணிவுமையம் G ஆனது x அச்சில் இருக்கும்.

$\therefore\ G \equiv (\bar{x}, 0)$ 5

திணிவுமைய தேற்றப்படி

$$\bar{x} = \frac{\sum m_i x_i}{\sum m_i}$$ 5

$$= \frac{\sum \pi\, \sigma (4a^2 - x^2)\delta x\ \times x}{\frac{11}{3}\pi a^3 \sigma}$$

$$= \frac{\sum \pi\, \sigma (4a^2 - x^2)\delta x\ \times x}{\frac{11}{3}\pi a^3 \sigma}$$

$$= \frac{\pi\, \sigma \sum (4a^2 x - x^3)\delta x}{\frac{11}{3}\pi a^3 \sigma}$$

$$= \frac{3}{11a^3}\int_0^a (4a^2 x - x^3)dx$$ 5

$$= \frac{3}{11a^3}\left(4a^2\frac{x^2}{2} - \frac{x^4}{4}\Big|_0^a\right)$$

$$= \frac{3}{11a^3}\left[\left(2a^2 \cdot a^2 - \frac{a^4}{4}\right) - 0\right]$$ 5

$$= \frac{3}{11a^3} \times \frac{7a^4}{4}$$

$$\bar{x} = \frac{21}{44}a$$ 5

45

‘

வட்டத்தட்டு PQ வை கருதுக.

திணிவு$= m_r$

கூம்பின் அடர்த்தி $-\rho$ என்க.

$m_r = \pi r^2 \delta x \rho$

$= \pi \left(\frac{a}{h}x\right)^2 \delta x \rho$ 5



கூம்பின் திணிவு $= \frac{1}{3}\pi a^2 h \rho$ 5

திணிவுமைய தேற்றப்படி

$$AG = \frac{\sum m_r x_r}{\sum m_r} = \frac{\sum \frac{\pi a^2 \rho}{h^2} \cdot x^3 \delta x}{\frac{1}{3}\pi a^2 h \rho}$$

$$= \frac{3}{h^3} \cdot \int_0^h x^3 \, dx$$ 5

$$= \frac{3}{h^3} \cdot \frac{x^4}{4}\bigg|_0^h$$

$$= \frac{3}{4}h$$ 5

20



R இன் திணிவு $= \frac{11}{3}\pi a^3\sigma = 11ak$; இங்கு $k = \frac{1}{3}\pi a^2\sigma$

உருளையின் திணிவு $= \pi(2a)^2h\sigma = 4\pi a^2h\sigma = 12hk$

கூம்பின் திணிவு $= \frac{1}{3}\pi(\sqrt{3}a)^2 \times 2h\sigma = 2\pi a^2h\sigma = 6hk$

சமச்சீரின்படி பொருளின் திணிவுமையம் G_0 ஆனது x அச்சில் அமையும்.

$\therefore\ G_0 \equiv (x_0, 0)$ 5

பொருள்	திணிவு	திணிவுமையம் (OY இலிருந்து)
உருளை	$12hk$ 5	$\frac{h}{2}$ 5
அகற்றிய R	$11ak$ 5	$\frac{21}{44}a$ 5
சேர்த்த R	$11ak$ 5	$h + \frac{21}{44}a$ 5
கூம்பு	$6hk$ 5	$\frac{3}{2}h + a$ 5
பொருள்	$18hk$ 5	x

திணிவுமைய தேற்றப்படி

$$\bar{x} = \frac{\sum m_i x_i}{\sum m_i}$$

$$= \frac{12hk \times \frac{h}{2} - 11ak \times \frac{21}{44}a + 11ak\left(h + \frac{21}{44}a\right) + 6hk\left(\frac{3}{2}h + a\right)}{18hk} \quad 10$$

$$= \frac{6h^2 + 11ah + 9h^2 + 6ah}{18h}$$

$$\bar{x} = \frac{15h + 17a}{18} \quad 5$$

65

$$h = 2a \Longrightarrow \ \bar{x} = \frac{30a + 17a}{18} = \frac{47}{18}a$$ 5

சமநிலையில்

$\curvearrowleft C \quad W \times \left(3a - \frac{47}{18}a\right) - W_0 \times 4a = 0$ 10

$$\Longrightarrow W_0 = \frac{7}{72}W$$

5



20

150

17)

a) சர்வசமனான B_1, B_2, B_3 என பெயரிடப்பட்ட 3 பைகள் உள்ளன. பை B_1 இல் 2 சிவப்பு, 2 பச்சை நிறப் பந்துகளும், பை B_2 இல் 3 சிவப்பு, 1 பச்சை நிறப் பந்துகளும், பை B_3 இல் 4 சிவப்பு நிறப் பந்துகளும் உள்ளன.. கோடாத நாணயம் ஒன்று இரு தடவைகள் மேலே எறியப்படுகிறது. இதன்போது இரு தடவைகளிலும் தலை பெறப்படின் பை B_1 உம், இரு தடவைகளிலும் பூ பெறப்படின் பை B_2 உம், ஒரு தடவை தலையும் பூவும் பெறப்படின் பை B_3 உம் தெரிந்தெடுக்கப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட பையில் இருந்து இரு பந்துகள் எழுமாறாக வெளியே எடுக்கப்படுகின்றன.

I. வெளியே எடுக்கப்பட்ட இரு பந்துகளும் சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

II. வெளியே எடுக்கப்பட்ட இரு பந்துகளும் சிவப்பாக இருப்பின், இப் பந்துகள் பை B_2 இல் இருந்து எடுக்கப்பட்டமைக்கான நிகழ்தகவைக் காண்க.



$B_1 = \{$இரு முறை $H\} \Longrightarrow P(B_1) = P(HH) = \frac{1}{2} \times \frac{1}{2} = \frac{1}{4}$ 5

$B_2 = \{$இரு முறை $T\} \Longrightarrow P(B_2) = P(TT) = \frac{1}{2} \times \frac{1}{2} = \frac{1}{4}$ 5

$B_3 = \{$ஒரு முறை H, ஒரு முறை $T\} \Longrightarrow P(B_3) = P(HT) + P(TH) = \left(\frac{1}{2} \times \frac{1}{2}\right) \times 2 = \frac{1}{2}$ 10

$R = \{$இரு பந்துகளும் சிவப்பு$\}$

B_1	B_2	B_3
2 சிவப்பு 2 பச்சை	3 சிவப்பு 1 பச்சை	4 சிவப்பு

$$P\left({}^{R}/_{B_1}\right) = \frac{{}^{2}C_2}{{}^{4}C_2} = \frac{1}{6} \qquad 10$$

$$P\left({}^{R}/_{B_2}\right) = \frac{{}^{3}C_2}{{}^{4}C_2} = \frac{1}{2} \qquad 10$$

$$P\left({}^{R}/_{B_3}\right) = \frac{{}^{4}C_2}{{}^{4}C_2} = 1 \qquad 5$$

I. மொத்த நிகழ்தகவு தேற்றப்படி

$$P(R) = P\left({}^{R}/_{B_1}\right)P(B_1) + P\left({}^{R}/_{B_2}\right)P(B_2) + P\left({}^{R}/_{B_3}\right)P(B_3)$$

$$= \left(\frac{1}{6}\times\frac{1}{4}\right) + \left(\frac{1}{2}\times\frac{1}{4}\right) + \left(1\times\frac{1}{2}\right) \qquad 10$$

$$P(R) = \frac{1}{24} + \frac{1}{8} + \frac{1}{2}$$

$$= \frac{2}{3} \qquad 5$$

II. Bayes' Theorem

$$P\left({}^{B_2}/_{R}\right) = \frac{P\left({}^{R}/_{B_2}\right)P(B_2)}{P(R)}$$

$$= \frac{{}^{1}/_{2}\times{}^{1}/_{4}}{{}^{2}/_{3}} \qquad 10$$

$$P\left({}^{B_2}/_{R}\right) = \frac{3}{16} \qquad 5$$

75

(b) n நோக்கல்களைக் கொண்ட x இன் பெறுமானங்களின் தொடை $\{x_1, x_2, x_3, \dots\dots\dots, x_n\}$ ஆகும். இவற்றின் இடை $\bar{x}$, நியமவிலகல் S_x ஆகும் எனக்கொள்வோம். $a(>0), b$ என்பன மாறிலிகளாக இருக்க x இன் பெறுமானங்கள் $y = ax + b$ எனும் ஏகபரிமான உருமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட போது பெறப்பட்ட y இன் நோக்கல் தொடை $\{y_1, y_2, y_3, \dots\dots\dots, y_n\}$ ஆக பெறப்பட்டது. இதன் இடை $\bar{y}$, நியமவிலகல் S_y எனக்கொள்வோம்.

i. $\bar{y} = a\bar{x} + b$ எனவும்

ii. $S_y = aS_x$ எனவும் காட்டுக.

30 மாணவர்களால் கணிப்பீட்டு பரீட்சையொன்றில் பெறப்பட்ட புள்ளிகள்(x) ஆனது $y = \frac{x+2}{2}$ என ஆகுமாறு உருமாற்றப்பட்ட போது பெறப்பட்ட புள்ளிகள் y இன் மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது.

y இன் வகுப்பாயிடை	மீடிறன்
$1-3$	02
$3-5$	06
$5-7$	16
$7-9$	02
$9-11$	04

y இன் இடை 6 எனக்காட்டி, அதன் இடையத்தைக் காண்க. மேலும் y இன் நியம விலகல் 2 (கிட்டிய முழு எண்ணில்) எனத்தரப்படுகிறது. மாணவர்களின் கணிப்பீட்டுப் புள்ளிகள் x இன் இடை, நியமவிலகல், இடையம் ஆகியவற்றை மதிப்பிடுக.

பரம்பல் x இன் ஓராயக்குணகத்தின் பெறுமானத்தை அண்ணளவாக கணித்து, பரம்பலின் வடிவம் யாதெனக் குறிப்பிடுக.

$y = ax + b$ ....(1)

$\bar{y} = \frac{\sum y}{n}$ 5

$= a\frac{\sum x}{n} + \frac{\sum b}{n}$

$= a\bar{x} + \frac{nb}{n}$

$\bar{y} = a\bar{x} + b$ ....(2) 5

$$S_y = \sqrt{\frac{\sum(y-\bar{y})^2}{n}}$$ 5

$(1) - (2)$ இலிருந்து

$$S_y = \sqrt{\frac{\sum[a(x-\bar{x})]^2}{n}}$$ 5

$$= \sqrt{\frac{a^2\sum(x-\bar{x})^2}{n}}$$

$$= |a|\sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}}$$

$S_y = aS_x$; $a > 0$

5

y இன் வகுப்பாயிடை	நடுப்பெறுமானம் (y)	மீடிறன் (f)	திரள் மீடிறன் $(c.f)$	fy
$1-3$	2	02	02	04
$3-5$	4	06	08	24
$5-7$	6	16	24	96
$7-9$	8	02	26	16
$9-11$	10	04	30	40
		$\sum f = 30$		$\sum fy = 180$

y இன் இடை $\bar{y} = \frac{\sum fy}{\sum f}$

$= \frac{180}{30}$

$\bar{y} = 6$ 5

y இன் இடையம் $= L + c\left(\frac{N/_2 - c.f}{f}\right)$

$= 5 + 2\left(\frac{30/_2 - 8}{16}\right)$ 5

$= 5.875$ 5

$y = \frac{x+2}{2}$

$y = \frac{1}{2}x + 1$

$\Longrightarrow \bar{y} = \frac{1}{2}\bar{x} + 1$

$\bar{y} = 6 \Longrightarrow 6 = \frac{1}{2}\bar{x} + 1$

$\Longrightarrow \bar{x} = 10$ 5

$S_y = \frac{1}{2}S_x$

$S_y = 2 \Longrightarrow 2 = \frac{1}{2}S_x$

$\Longrightarrow S_x = 4$ 5

$y = \frac{1}{2}x + 1$

$y = 5.875 \Longrightarrow x = 9.75$ 5

$\therefore$ x இன் இடையம் $= 9.75$

ஓராயக்குணகம் $\triangleq \dfrac{3(\text{இடை} - \text{இடையம்})}{\text{நியமவிலகல்}}$

$= \frac{3(10-9.75)}{4}$ 5

$= 0.1875 > 0$ 5

நேர் ஓராயமான பரம்பல்

5

75

150